# அறிவுரைகள்

ஒன்லைன் முறையில் மட்டுமே பொலிஸ் தடையகற்றல் ( POLICE CLEARANCE ) பத்திர விண்ணப்பப் படிவம் அனுப்பவேண்டும் என்பதுடன் அதற்கு ஒன்லைன் முறையில் பொலிஸ் தடையகற்றல் ( POLICE CLEARANCE ) பத்திர விண்ணப்பிப்பதற்கு ( www.police.gov.lk ) எனும் இணையத்தளத்திற்குச் சென்றால் பொலிஸ் தடையகற்றல் ( POLICE CLEARANCE ) பத்திர விண்ணப்பிப்பதற்கான வசதியுள்ளது.அதற்கு முதலில் கட்டணமானது கடனட்டை ( Credit card ) மூலமாகவோ அல்லது டெபிற் அட்டை ( Debit card ) மூலமாகவோ ஒன்லைன் முறையில் கட்டணம் செலுத்த முடியும்.

விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்திட முன்னர் கீழ்வரும் அவணங்களில் ( document ) ஸ்கேன் ( scan ) பண்ணப்பட்ட பிரதிகள் ( 250kb மேற்படாது PDF Format ) வெவ்வேறாக தயார்படுத்தி வைத்துக்கொள்வது அத்தியாவசியமாகும்.

- வெளிநாட்டுக் கடவுச்சீட்டின் நிலையான தரவுகளடங்கிய பக்கம்.
- வெளிநாட்டுக் கடவுச்சீட்டின் எல்லாவித நாடுகளிற்குமான ( All countries ) பக்கம்.
- வெளிநாட்டுக் கடவுச்சீட்டின் மாற்றம் மற்றும் கணிப்பீட்டின் ( Alteration and Observations ) பக்கம்.
- தேசிய அடையாள அட்டையின் முன் பக்கம்.
- தேசிய அடையாள அட்டையின் பின் பக்கம்.
- பிறப்புச்சான்றுப் பத்திரத்தின் முன் பக்கம்.
- பிறப்புச்சான்றுப் பத்திரத்தின் பின் பக்கம்.
- உங்களது தேசிய அடையாள அட்டையில் குறிப்பிட்டுள்ள பெயரிற்கும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டில் குறிப்பிட்டுள்ள பெயரிற்குமியையில் மாற்றமிருப்பின் மட்டுமே அதுசம்பந்தமாகக் குறிப்பிட்டு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள சத்தியக்கடதாசி ஒன்று.

கவனத்தில் கொள்ளவும் 20 வினாடிகளிலிருந்து விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்யத் தொடங்கி அதற்குக் குறைந்தளவான நேரத்திற்குள் விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து கட்டணத்தினைச் ( payment ) செலுத்தி நிறைவு செய்தல் வேண்டும்.

**புதிய விண்ணப்பப் படிவத்தின் கீழ் ( New Application ) விண்ணப்பப் படிவத்தினை அனுப்பிய பின்னர் சான்றிதழ் பத்திரம் வினியோகிப்பதற்கு விண்ணப்பப் படிவத்தினை அனுப்பிய தினத்திலிருந்து 14 வேலை நாட்கள் எடுக்கும்.**

கவனத்தில் கொள்ளவும் :-

- பொலிஸ் தடையகற்றல் ( POLICE CLEARANCE ) பத்திர விண்ணப்பம் செய்வதற்கு 16 வயதிற்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜை ஒருவர் தேசிய அடையாள அட்டையின் தெளிவான பிரதி ஒன்றினை விண்ணப்பத்துடன் இணைப்பது கட்டாயம் என்பதுடன் அவ்வாறு சமர்ப்பிக்காது தெளிவற்ற பிரதி அல்லது சாரதி அனுமதிப் பத்திரம் அல்லது வேறேதேனும் அடையாளம் காண்பதற்கான ஆவணங்களினை இணைத்து விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்படி அல்லது கட்டணம் மீளச் செலுத்தப்படாது நிராகரிக்கப்படும் என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.

- விண்ணப்பப் படிவத்தில் சரியான தகவல்களை வழங்காமை, தெளிவானதும் செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை மற்றும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டினை இணைத்தனுப்பாதமை போன்ற குறைபாடுகளுடன் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப் படிவங்கள் கட்டணம் மீழ வழங்காது நிராகரிக்கப்படும்.

உதாரணம் :-





இலங்கை பிரஜாவுரிமையற்ற வெளிநாட்டவர்களிற்கு அடையாள அட்டை இலக்கமோ அல்லது அதன் பிரதியோ இணைக்கவேண்டிய அவசியமில்லை.

இந்த பொலிஸ் தடையகற்றல் ( POLICE CLEARANCE ) பத்திர விண்ணப்பப் படிவத்திலுள்ள கேள்விளிற்கான பதிலை உட்புகுத்தும்போது கீழ் வரும் விடயங்கள்மீது கவனம் செலுத்தவும். விண்ணப்பப் படிவமானது தனியே ஆங்கில மொழியில் பெரிய எழுத்துக்களில் ( மின்னஞ்சல் முகவரியினைத் தவிர ) நிரப்பவும். ( EX :- BANDARA ) மேலும் விண்ணப்பப் படிவத்தினை நிப்பும்போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விஷேட குறியெழுத்துக்கள் ( " " # & $ ) பாவிக்கவேண்டாம்.

பொலிஸ் தடையகற்றல் ( POLICE CLEARANCE ) பத்திர விண்ணப்பப் படிவத்தினை விண்ணப்பிக்கம்போது விண்ணப்பப் படிவத்தின் முதலாவது கேள்வி Application type எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

- அதில் விண்ணப்பதாரிக்கு " New " மற்றும் "Renewal" என முறைமையிரண்டு வழங்கப்பட்டுள்ளது.

- முதல் முறையாக இலங்கைப் பொலிஸ் தடையகற்றல்ப் பத்திரத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில், முன்'னர் விண்ணப்பித்த சரியான தகவல்களை உட்புகுத்தாத காரணத்தினால் குறைபாடுடனான சான்றிதழ் கிடைத்த சந்தர்ப்பத்தில் ( உ+ம் - தேசிய அடையாள அட்டை இலக்கத்திற்குப் பதிலாக வெளிநாட்டுக் கடவுச்சீட்டு இலக்கத்தினை உட்புகுத்துவதற்கும் தேசிய அடையாள அட்டையிலுள்ள பெயரிற்குப் பதிலாக வெளிநாட்டுக் கடவுச்சீட்டிலுள்ள பெயரினை உட்புகுத்துவதற்கும், தற்போதைய முகவரியினை மாற்றுவதற்கும், சான்றிதழ் வினியோகிக்கப்பட்ட காலத்தினை கால நீடிப்பு செய்வதற்கும் அல்லது ஏதேனும் கால எல்லையினை அகற்றுவதற்கும், புதிய தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை அல்லது புதிய வெளிநாட்டுக் கடவுச்சீட்டு இலக்கத்தினை உட்புகுத்துவதற்கும், தேசிய அடையாள அட்டையிலுள்ள அல்லது வெளிநாட்டுக் கடவுச்சீட்டிலுள்ள பெயர், முகவரி அல்லது வேறேதும் தகவல்களைத் திருத்தம் செய்யும் சந்தர்ப்பங்களில் அத்தகவல்களை உட்புகுத்திட ) ஆகிய சந்தர்ப்பங்களில் " New " எனும் முறையினூடாக விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.


- "Renewal" என்ற முறைமையினைத் தேர்ந்தெடுக்கும்போது ஒரு வருட காலத்திற்குள் இறுதியாக பெற்றுக்கொண்ட சான்றிதழின் பிரதி ஒன்று மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் அந்த விண்ணப்பத்தில் தூதுவராலய முகவரியைத் தவிர வேறு எந்தவிதமான மாற்றங்களும் செய்யவியலாது.

தேசிய அடையாள அட்டையிலும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் அதேபோலவே குறிப்பிடப்படல் வேண்டும். [ஆங்கில எழுத்து அதேமாதிரியே சரியாக உட்புகுத்திட பொறுப்பாதல் வேண்டுமென்பதுடன் எழுத்துக்கள் சரியாகக் குறிப்பிடாமை ( Spelling Mistake ) சம்பந்தமாக தடையகற்றல் சான்றிதழ் வழங்கும் பிரிவு எந்தவிதமான பொறுப்புக்குமுள்ளாகாது. ]

**<u>ஒன்லைன் ( Online ) முறைமையின் கீழ் தடையகற்றல் சான்றிதழிற்கான விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்தல்</u>**

விண்ணப்பப் படிவத்தில் தகவல்களைச் சமர்ப்பிக்கும் போது கீழ் வரும் ஆலோசனைகளைப் பின்பற்றி நிரப்புங்கள். **இங்கு சிவப்பு நிறத்திலான நட்சத்திரக் குறியீடு இடப்பட்டுள்ள தகவல்களை உங்களால் கட்டாயமாக உட்புகுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவை மிகவும் சரியாக உட்புகுத்தப்படல் வேண்டும்.**


- புதிய விண்ணப்பப் படிவத்தினை அனுப்ப வேண்டுமாயின் New Application எனும் துணைப்பக்கப் பிரதி ஒன்று வேண்டுமாயின் "Renewal" என்பதைத் தேர்ந்தெடுங்கள். ( " New " "Renewal" ) என்ற சான்றிதழ்களின் வித்தியாசம் மேலே உள்ள அறிவுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




<u>Renewal எனும் விடயத்தினைத் தேர்ந்தெடுத்தால் கீழ் வருமாறு விண்ணப்பத்தினை பூரணப்படுத்த நடவடிக்கை எடுக்கவும்.</u>




ஒரு வருட காலத்திற்குள் பெற்றுக்கொண்ட சான்றிதழில் எனது இலக்கம் எனவிருக்கும் இலக்கத்தினை உட்புகுத்தி ( Load ) என Click பண்ணுங்கள்.





அதன் பின்னர் உங்களிற்கு மாற்ற வேண்டிய நாடு மற்றும் தூதரகத்தின் பெயரை மாற்றுங்கள்.




நீங்கள் கொடுத்துள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதுமான தகவல்களென ஏற்றுக்கொண்டு மேற்குறிப்பிடப்பட்டுள்ள வசனத்திற்கு இடப்பட்டுள்ள வெற்றுக் கட்டத்தின் மேல் Click பண்ணவும். அதன் பின்னர் நீங்கள் கட்டணத்தைச் செலுத்துவதற்கான செயலிற்கு அனுப்பப்படுவீர்கள்.

**<u>New என்ற தேர்வினைத் தேர்ந்தெடுத்தால் கீழ்வருமாறு விண்ணப்பப் படிவத்தினை நிரப்புவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுங்கள்.</u>**

விண்ணப்பப் படிவத்தினை நிரப்பும்போது மிகவும் முக்கியமான விடயங்கள் சம்பந்தமாக கீழ் வரும் ஆலோசனைகளைப் பின்பற்றிச் செயற்படுங்கள்.





மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக " YES " எனக்குறிப்பிடுவது 16 வயதிற்கு முன்னர் நிரந்தரமாகவே இலங்கையிலிருந்து வெளியேறிச்சென்ற இலங்கை விண்ணப்ப தாரிகள் மட்டுமேயாகும். அவ்வாறான விண்ணப்ப தாரிகள் தற்போது இலங்கைத் தேசிய அடையாள அட்டையினைப் பெற்றிராதமையால் தான் வசிக்கின்ற நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகத்தினூடாக விண்ணப்பத்தினை அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளுங்கள்.அங்கு பொலிஸ் தடையகற்றல் சான்றிதழினை வினியோகிக்க முடியும். பிறந்த நாளிலிருந்து இலங்கையிலிருந்து நிரந்தரமாக வெளியேறிச்சென்ற தினம் வரை மட்டுமேயாகும்.




- NIC No : இலக்கமானது ஒன்பதும் ஆங்கில எழுத்து V அல்லது X எழுத்தில் உள்ள பழய தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை உட்புகுத்தவும்.
- Confirm New NIC No : மீணடும் ஒன்பது இலக்கத்திலான ஆங்கில எழுத்து V அல்லது X எழுத்தில் உள்ள பழய தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை உட்புகுத்தவும்.
- New NIC No : புதிய இலக்கம் பன்னிரண்டிலான தேசிய அடையாள அட்டை இருப்பின் அந்த இலக்கத்தினை உட்புகுத்தவும்.
- Confirm New NIC No : மீணடும் புதிய இலக்கம் பன்னிரண்டிலான தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை உட்புகுத்தவும்.
- Passport No: வெளிநாட்டுக் கடவுச்சீட்டிலக்கத்தை உட்புகுத்தவும்.
- Confirm Passport No : மீணடும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டிலக்கத்தை உட்புகுத்தவும்.
- Country : தடையகற்றல் சான்றிதழ் சமர்ப்பிப்பதற்கான நாட்டினைத் தேர்ந்தெடுங்கள்.





- **Reference high Commission/Embassy/Consulate** – Country இன் கீழ் தேவையான நாட்டினைத் தேர்ந்தெடுக்கும்போது இதன் கீழ் வரும் high Commission/Embassy/Consulate இற்குள் தேவையான முகவரியினைத் தேர்ந்தெடுங்கள். ( உதாரணமாக இலங்கையிலுள்ள ரூமேனியா தூதரகத்தினைக் குறிப்பிடவேண்டுமாயின் EMBASSY of Romania – Colombo எனத் தேர்ந்தெடுங்கள். இது சரியாக உட்புகுத்தப்பட்டிருப்பின் இதற்குக் கீழ் இருக்கும் இரு பகுதிக்கும் தானாகவே முகவரி உள்வாங்கப்படும். தேவையான முகவரியினைத் தேர்ந்தெடுக்கும் பட்டியலில் ( Drop Down ) இல்லையாயின் Other என்பதைத் தேர்ந்தெடுத்து அதற்குக் கீழ் இருக்கும் ***High Commission/Embassy/Consulate ( Addressee & The Name Of The Authority )** : மற்றும் ***Indicate** ***address of the high commission/embassy/consulate to which the certificate should be addressed to*** என்ற இரண்டிலும் முகவரியினைச் சரியாக type பண்ண வேண்டும்.





- ***Sex** - ஆணா பெணா என்பதை உட்புகுத்தவும். ( Male எனத் தேர்ந்தெடுத்தால் சான்றிதழின் பெயரிற்கு முன்னால் Mr எனவும் மற்றும் Female எனத் தேர்ந்தெடுத்தால் சான்றிதழின் பெயரிற்கு முன்னால் Ms எனவும் அச்சாவதால் இது சம்பந்தமாக மிகவும் கவனமாகச் செயற்படல் வேண்டும் )

- *Status – திருமணமானவரா?, திருமணமாகாதவரா?, குருமாரா? என்பதற்குள் பிரிவை சரியாகத் தேர்ந்தெடுங்கள். ( Rev. எனத் தேர்ந்தெடுத்தால் பெயரிற்கு முன்னால் Rev. என அச்சாகும் )




- **Applications Name in full as in the NIC** - தேசிய அடையாள அட்டையிலுள்ளவாறு பெயர் அவ்வாறே சரியாக உட்புகுத்தவும்.

- **Applications Name in full as in the Passport** - வெளிநாட்டுக் கடவுச்சீட்டிலுள்ளவாறு பெயர் அவ்வாறே சரியாக உட்புகுத்தவும். ஏதேனும் மாற்றம் வேறுபாடு மற்றும் அவதானிப்பு ( Alteration And Observation ) பக்கத்தில் பெயர் மாறியிருப்பின் அவ்வாறு மாற்றப்பட்ட பெயரினை உட்புகுத்தவும்.




- **Which name should be printed in certificate** எனக் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விக்கு " NIC " மற்றும் " Passport" என முறைமைகளிரண்டு வழங்கப்பட்டுள்ளது.

- " NIC " எனும் முறையைத் தேர்ந்தெடுத்தால் சான்றிதழில் அச்சாவது தேசிய அடையாள அட்டையிலுள்ள பெயரும் அதிலுள்ள இலக்கமுமாகும்.

- "Passport" எனும் முறையைத் தேர்ந்தெடுத்தால் சான்றிதழில் அச்சாவது வெளிநாட்டுக் கடவுச்சீட்டிலுள்ள பெயரும் அதிலுள்ள இலக்கமுமாகும். இங்கு விண்ணப்பதாரியின் வெளிநாட்டுக் கடவுச்சீட்டிலுள்ள பெயரிற்கும் தேசிய அடையாள அட்டையிலுள்ள பெயரிற்குமிடையில் வேறுபாடு காணப்படின் மட்டுமே அதற்கு சட்டத்தரணியினதோ அல்லது சமாதான நீதவானினது உறுதிப்படுத்தப்பட்ட சத்தியக்கடதாசியின் மூலப்பிரது இணைக்கப்படல் வேண்டும். ( பெயர்களிற்கிடையில் வேறுபாடு இல்லாவிடில் சத்தியக்கடதாசிக்குப் பதிலாக வெளிநாட்டுக் கடவுச்சீட்டின் பிரதியை இணைத்தல் போதுமாகும் ).

- ***Address**
- ***Police Area**
- ***From**
- ***To**

தடையகற்றல் சான்றிதழ் தேவைப்படும் கால அளவுகளிற்கமைவாக முகவரிகள் மற்றும் கால அளவுகள் இங்கு உட்புகத்தப்படவேண்டும். முகவரிகள் பலவற்றில் வசித்திருப்பின் அந்த முகவரிகள், அதற்குரிய பொலிஸ் பிரிவுகள் மற்றும் அவ் முகவரிகளில் வசித்த கால எல்லைகளை வெவ்வேறாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் உரிய பொலிஸ் பிரிவுகள் மற்றும் அவ் முகவரிகளில் வசித்த கால எல்லைகளை உட்புகுத்திய பின்னர் Add என Click பண்ணி மீண்டும் அடுத்த முவரிக்கான தகவல்களை வழங்குங்கள். தகவல்களை உட்புகுத்தி முடியும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் Add என Click பண்ண வேண்டும். Add என Click பண்ணா விட்டால் அத் தகவல்கள் விண்ணப்பப்படிவத்தில் உள்ளடங்காது. உட்புகுத்தும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் முகவரிகளிற்குமான தகவல்கள் Add என Click பண்ணிய பின்னர் சரியாக உட்புகுத்தபட்டிருப்பின் அதற்குக் கீழேயுள்ள கட்டத்திற்குள் அத் தகவல்கள் உட்புகுத்தபட்டிருக்கும் விதத்தைக் காணமுடியும். இங்கு உட்புகுத்தபட்டிருக்கும் கால எல்லைகள் மட்டுமே சான்றுப்பத்திரத்தில் அச்சாகும்.

| Address | Police Area | From | To | Edit | Delete |
|---|---|---|---|---|---|
| 1 (ඔබේ ලිපිනය ඇතුලත් කරන්න) | Kelaniya | 16/01/1998 | 31/12/2002 | | |
| 2 (ඔබේ ලිපිනය ඇතුලත් කරන්න) | Alawwa | 01/01/2003 | 31/12/2013 | | |
| 3 (ඔබේ ලිපිනය ඇතුලත් කරන්න) | Rambukkana | 01/01/2014 | 09/08/2024 | | |

- **Are you referred applicant through the Sri Lankan Foreign Employment Bureau ( SLBFE ) ? –** சான்றுப்பத்திரத்திரம் அச்சாவதுடன் அந்த சான்றுப்பத்திரத்திரம் பொலிஸ் தலைமையகத்தினூடாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு பாரம்கொடுக்கவேண்டுமாயின் “ YES ” எனவும், விண்ணப்பதாரியின் வீட்டிற்குத் தபால் மூலமாக பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் “ NO ” எனவும் அழுத்தவும். “ YES ” என அழுத்தினால் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் பொலிஸ் தடையகற்றல் சான்றுப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்பட்ட கடிதம் உரிய இடத்திற்கு பாரமழித்தல் வேண்டும்.

*Are you referred applicant through the Sri Lankan Foreign Employment Bureau(SLBFE)? No

☐ *I declare that the information provided above are true to the best of my knowledge and I agree to the terms of Sri Lankan Police Headquarters.

நீங்கள் கொடுத்துள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதுமான தகவல்களென ஏற்றுக்கொண்டு மேற்குறிப்பிடப்பட்டுள்ள வசனத்திற்கு இடப்பட்டுள்ள வெற்றுக் கட்டத்தின் மேல் Click பண்ணவும். அதன் பின்னர் நீங்கள் கட்டணத்தைச் செலுத்துவதற்கான செயற்பாட்டிற்கு அனுப்பப்படுவீர்கள்.

**கவனத்தில் கொள்ளவேண்டியது**

I. விண்ணப்பம் சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ளும்போது பிரதேச பொலிஸ் அறிக்கை சிபாரிசு செய்யப்படாமை மற்றும் தேசிய அடையாள அட்டையிலுள்ள குறைபாடுகள் காணப்படின் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு மற்றும் மின்னஞ்சல் வாயிலாக விண்ணப்பதாரிக்கு தெரியப்படுத்தப்படுவதால் சரியான தொலைபேசி இலக்கங்களையும் மின்னஞ்சல் முகவரியினையும் குறிப்பிடல் வேண்டும்.

II. பொலிஸ் தடையகற்றல் அறிக்கை இலங்கைப் பொலிஸினால் நீங்கள் சம்பந்தமாக மேற்கொள்ளும் விசாரணையின் மூலமாக பெறப்படுகின்ற பின்புல அறிக்கையின் அடிப்படையில் பொலிஸ் தலைமையகத்தின் நிர்வாகப்பணிப்பாளரினால் வழங்கப்படுவதுடன் விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியினால் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாக மட்டுமே அனுப்பி வைக்கப்படும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

III. விண்ணப்பதாரியின் தனிப்பட்ட தகவல்களை உட்புகுத்தும்போது " present Address in Sri Lanka " எனக்குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் தற்போதைய முகவரியினைக் குறிப்பிடும்போது முகவரியின் இறுதியில் " Sri Lanka " எனக்கட்டாயமாகக் குறிப்பிடல் வேண்டும்.

IV. பொலிஸ், முப்படையினர், சிவில் பாதுகாப்புப் படையினர், கடலோரப் பாதுகாப்புப் படையணி ஆகிய படைகளில் கடமையிலிருக்கும் உத்தியோகத்தர்களிற்கு பொலிஸ் தடையகற்றல் பத்திரம் வினியோகம் செய்யப்படுவது அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியின் எழுத்துமூலமான அனுமதியின் பிரகாரமாகும்.

V. நீங்கள் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவங்கள் சம்பந்தமான நிலைப்பாட்டினை அறிய வேண்டிய தேவை ஏற்பட்டால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை மேற்கொண்டு விசாரிக் முடியும்.

VI. விண்ணப்பப்படிவத்தில் ஏதேனும் மாற்றம் செய்யவேண்டுமாயின் அதற்கு விண்ணப்பப்படிவம் பாரம் கொடுத்து இரு தினங்களுக்குள் கோரிக்கை விடல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் விடுக்கப்படும் கோரிக்கை நிராகரிக்கப்படும்.

VII. தடையகற்றல் விண்ணப்பப்படிவத்தில் உட்புகுத்தப்பட்டிருக்கும் பிழையான தகவல்கள் மற்றும் முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பங்களில் அக்குறைபாடுகளை சீர்படுத்துமாறு தொலைபேசி இலக்கத்திற்கு, மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வட்ஸ்அப் ( E-MAIL / WhatsApp ) மூலமாக அறிவிக்கப்படும் சந்தர்ப்பத்தில் 03 மாதங்களிற்குள் முழுமைப்படுத்தப்படாதுவிட்டால் அவ் விண்ணப்பப்பத்தினை இணையத்திலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

VIII. விண்ணப்பப்படிவத்தில் பொலிஸ் பிரிவுகளில் வசித்த காலங்கள் சரியாகக் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில் மற்றும் பொலிஸ் விசாரணையூடாக வசித்த காலங்கள் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வட்ஸ்அப் ( E-MAIL / WhatsApp ) மூலமாக அது சம்பந்தமாக உங்களிற்கு அறிவிக்கப்படும் என்பதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் அதுசம்பந்தமாக சரியான தகவல்களை வழங்காது விட்டால் பொலிஸ் நிலையங்களூடாக சிபாரிசு செய்யப்படுகின்ற கால எல்லைக்கு மட்டுமே பொலிஸ் தடையகற்றல் சான்றிதழ் வினியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| தொலைபேசி இலக்கம் | – | 0112439185, 0112439186, 0112122800 |
| தொலை நகல் இலக்கம் | – | 0112439187, 0112439188 |
| வட்ஸ்அப் இலக்கம் | – | 0718592990 |
| மின்னஞ்சல் முகவரி | – | clearance@police.gov.lk |
| இணையத்தள முகவரி | – | www.police.gov.lk |
| முகவரி | - | 17 ஆவது மாடி ,சுருபாய, பத்தரமுல்ல |